**நாள்:. 30.12.22 சி.சி. 4/2014**

**அ.சா.1 தனுஷ்கோடி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி...**

நான் சபாபதியிடம் 2 டாலர் செயின், 1 முறுக்கு செயின், 2 மோதிரம், ஒரு ஜோடி கல்தோடு, ஒரு ஜோடி வெள்ளை கல்தோடு ஆக மொத்தம் 9 எண்ணிக்கைகொண்ட தங்க பொருட்கள் கொடுத்துள்ளேன். இவை அணைத்தும் 14 1/4 **(பதினான்கேகால் பவுன்)** ஆகும். நான் வெங்கடேஸ்வரியிடம் சென்று எனது நகையை கேட்டேன். அவர் என்னிடம் தற்போது தரமுடியாது, 2 மாதம் கழித்து தருவதாக சொன்னார். நான் இது சம்மந்தமாக மதுரை காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்ததன்பேரில் எனக்கு 4 பவுன் நகை மட்டும் சபாபதி மற்றும் அவரது மனைவி ஆகியோர்கள் கொடுத்தார்கள். மீதமுள்ள 10 1/4 பவுனை வெங்கடேஸ்வரியிடம் உள்ளதாகவும், அதை வாங்கி தருவதாக சொன்னார்.

நான் அதை வெங்கடேஸ்வரியிடம் தும்பைப்பட்டி சென்று கேட்டேன். அவர் முத்தூட் பைனான்சில் அடகு வைத்திருப்பதாகவும், 2 மாதங்கள் கழித்து திருப்பி தருவதாகவும் சொன்னார். திருப்பித்தராமல் என்னை ஏமாற்றிவிட்டார். அதன்பின்பு நான் கீழவளவு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். **(முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**